## சுற்றறிக்கை

## பாவேந்தர் பாரதிதாசன் 131ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா

மாண்பமை துணைவேந்தர் அவர்களை நெறியாளராகக் கொண்டு பாவேந்தர் பாரதிதாசன் 131ஆம் ஆண்டு பிறந்தநாள் விழாவைக் கொண்டாடும் பல்வேறு செயல்பாடுகளுள் ஒன்றாகப் பாவேந்தர் படைப்பும் வாழ்வியலும் பற்றிய கவிதை, கட்டுரை, பாட்டு, பேச்சுப் போட்டிகள் நடத்தப்பெறவுள்ளன. இப்போட்டிகள் குறித்த அறிக்கை இத்துடன் இணைத்தனுப்பப் பெறுகிறது.

பல்கலைகக்கழகத்தில் கொடுக்கப்பெற்ற இத்தலைப்பின் கீழ் **பல்கலைக்கழகத்துறைகள் மற்றும் கல்லூரிகளில் போட்டிகள் வைத்து அதில் வெற்றிப்பெற்ற (அ) தெரிவுச் செய்யப்பெற்ற ஒவ்வொரு போட்டிகளிலும் இரண்டு மாணவர்களின் கட்டுரைகள் மற்றும் கவிதைகளோடு** அவர்களின் பட்டியலையும் **இயக்குநர், பாரதிதாசன் உயராய்வு மையம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி – 24** என்ற முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம். மேற்குறித்த கவிதைகள், கட்டுரைகள், அடங்கியப் பட்டியல்கள் **பாரதிதாசன் உயராய்வு மையத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் 11.03.2021.**

**பாட்டுப் போட்டி, பேச்சுப் போட்டி ஆகியவை 10.03.2021 புதன்கிழமை அன்று பாரதிதாசன் உயராய்வு மையக் கருத்தரங்க அறையில் முற்பகல் 10.30** மணியளவில் நடைபெறவுள்ளது.

நான்கு போட்டிகளில் பல்கலைக்கழக அளவில் வெற்றிப்பெற்ற முதல் மற்றும் இரண்டாம் இடங்களைப் பெறுவோருக்குப் பரிசுகளும் சான்றிதழ்களும் பாரதிதாசன் பிறந்தநாள் விழா அன்று வழங்கப்பெறும். பல்கலைக்கழக அளவிலான இப்போட்டிகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பெறும்.

**பதிவாளர்**

பெறுநர் :

1. **துறைத்தலைவர்கள், பணியாளர்கள் பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி.**
2. **முதல்வர்கள், பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு இணைவுபெற்ற கல்லூரிகள்.**

**குறிப்புகள்:**

1. **அரசு மற்றும் பல்கலைக்கழக வழிகாட்டுதலின்படி முகக்கவசம் மாணவர்கள் அவசியம் அணிந்துவர வேண்டும்.**
2. **போட்டிகளில் பாரதிதாசன் பல்கலைக்கழகத்துறைகள், பணியாளர்கள் மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவுப்பெற்ற கல்லூரிகளில் மாணவர்கள் மட்டுமே பங்கேற்க முடியும்.**
3. **மாணவர்களின் பெயர், வகுப்பு, துறை, கல்லூரி முகவரி, அலைப்பேசி எண் போன்றவை ஒவ்வொரு படைப்பிலும் கட்டாயமாக இருக்க வேண்டும்.**

# பாரதிதாசன் உயராய்வு மையம்
## பாரதிதாசன் பல்கலைக்கழகம்
### திருச்சிராப்பள்ளி - 620 024

**முனைவர் அ.கோவிந்தராஜன்**
இயக்குநர் (பொ.)

தொலைபேசி 0431 2407075
செல்பேசி 9940933534
9445293534
விரிவு எண் 616

---

## பாரதிதாசன் இலக்கிய ஆய்வு வட்டம் - (2021)
## கவிதைப்போட்டி

- **மாணாக்கர்களுக்குரிய தலைப்பு**

  1. எழில்மிகு தமிழ்நாடு
  2. நெஞ்சுக்குறுதி கூறல்

- **அலுவலர்களுக்குரிய தலைப்பு (பல்கலைக்கழக அலுவலர்களுக்கு மட்டும்)**

  1. ஒற்றுமைதான் வழி
  2. வாழ்வில் உயர்வுகொள்

மரபுக் கவிதையோ, புதுக் கவிதையோ எழுதலாம். 32 வரிகளுக்கு மிகாமல் அமைய வேண்டும்.

## கட்டுரைப்போட்டி

- **மாணாக்கர்களுக்குரிய தலைப்பு**

  1. முயற்சியே வாழ்வு, சோம்பலே சாவு
  2. வைகறைத் துயிலெழு

- **அலுவலர்களுக்குரிய தலைப்பு (பல்கலைக்கழக அலுவலர்களுக்கு மட்டும்)**

  1. நேர்வழி
  2. அனைவரும் உறவினர்

A-4 அளவில் நான்கு பக்கங்களுக்கு மிகாமல் அமைய வேண்டும்.

போட்டிக்குரிய கவிதைகளும், கட்டுரைகளும் **பாரதிதாசன் உயராய்வு மையத்திற்கு வந்து சேரவேண்டிய கடைசி நாள் 11.03.2021**

**பாட்டுப் போட்டி, பேச்சுப் போட்டி ஆகியவற்றை 10.03.2021 புதன்கிழமை அன்று பாரதிதாசன் உயராய்வு மையக் கருத்தரங்க அறையில் முற்பகல் 10.30 மணியளவில் நடத்த உள்ளது.**

## போட்டியாளரின் விபரங்கள்

## கவிதை / கட்டுரைப்போட்டி (மாணவர்)

தலைப்பு :

மாணவர் பெயர் :

(தமிழில்)

துறை :

ஆண்டு :

கல்லூரி பெயர்

முகவரி :

அஞ்சல் எண் :

கல்லூரி

தொலைப்பேசி எண் :

மாணவர்

அலைப்பேசி எண் : 1.

2.

மாணவர்

மின்னஞ்சல் (e.mail):

தேதி : மாணவர் கையொப்பம்

---

❖ **மேலும் மாணவரின் ஒவ்வொரு படைப்பிலும் இவ்விண்ணப்பத்தை இணைத்து அனுப்ப வேண்டுகிறோம்.**